# தமிழ் இலக்கியங்களும் வாழ்வியல் சிந்தனைகளும்

***முனைவர் மு. மணிமேகலா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்காட் கல்வியியல் கல்லூரி, சேரன்மகாதேவி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7738

**முன்னுரை**

இலக்கியம் என்பது வாழ்க்கையை வழிமொழிந்து சொல்வதாகும். வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி இலக்கியம் என்பர். தமிழ் இலக்கியங்கள் தனிமனிதனை சுத்திகரிக்கும் சிறந்த பணியை செய்து வருகிறது. இவ்வகையில் தமிழ் இலக்கியங்களை வாழ்வில் இலக்கியங்கள் என்றும் கூறலாம். முனிதனிடம் காணப்படும் கடல் அளவு உணர்ச்சிகளைச் சின்னச் சின்ன சிப்பிகளில் வைத்துக் காட்டுகிறது. இலக்கியங்களின் சாராம்சம் வாழ்வை உயர்த்தும் வாழ்வியல் கருத்துக்களைக் கூறி அவனை வாழ்வாங்கு வாழச் செய்கிறது.

தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொன்றும் பழந்தமிழரின் நற்பண்புகளையும் சமூக வாழ்வியலையும் எடுத்தியம்புகிறது. மொழிக்கு இலக்கணம் வகுத்த நம் முன்னோர்கள் மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்று வாழ்வியல் நெறியை வகுத்து செம்மையாக வாழ்ந்துள்ளமையை சங்கத்தமிழ் நூல்கள் முலம் அறியமுடிகிறது.

மனிதப் பண்புகளும் வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து கொண்டிருக்கும் வேகம் நிறைந்த வாழ்க்கைச் சுழல் இன்றைய சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளது. மனிதப் பண்புகளைத் திரும்பிப் பார்க்கக்கூட நேரமற்ற நிகழ்வுகளால் மட்டுமே நகர்ந்து கொண்டிருக்கிறது இன்றைய சமூகம் இதனை நெறிப்படுத்த மேம்பாடடையச் செய்ய தமிழ் இலக்கியங்களின் பங்கு இன்றியமையாததாகும். எனவே தமிழ் இலக்கியங்களில் காணப்படும் வாழ்வியல் சிந்தனைகள்குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**பண்பாடு**

ஈராயிரம் ஆண்டுகள் முற்பட்ட தொன்மை வாய்ந்தது தமிழர் பண்பாடு. பண்டைத்தமிழர் பண்பாட்டின் நிலைக்களனாய், சிகரமாய் வாழ்ந்து சிறந்தவர்கள். அன்றைய வாழ்வியற் பண்பாடு போற்றத்தக்கது மட்டுமல்ல, நம் வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் கொள்ளத்தக்கது. அக்கால மக்கள் தாங்கள் வாழ்ந்த மண்ணை அதன் இயல்போடு எப்படி நேசித்தார்கள் என்பதையும் அவர்களைச் சுற்றி வாழ்ந்த உறவுகளிடம் எப்படி அன்பு காட்டி வாழ்ந்தார்கள் என்பதையும் சங்க இலக்கியங்கள் நம் கண்முன்னே திரையிட்டுக் காட்டுகின்றன.

**'ஒருபண்பாடு இல்லையென்றால் பாரதமில்லை**
**நாம் பண்போடு வாழ்ந்திருந்தால் பாவமுமில்லை"**

என்ற திரையிசைப் பாடல்வரி, பாரத நாட்டையும், பண்பாட்டையும் பிரிக்கவே முடியாது என்பதைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக் கூறுகிறது. ஒவ்வொரு மனிதனும் சான்றோனாக வாழ வேண்டும் என்பதே பண்டையத் தமிழரின் குறிக்கோள். உலகத்தோடு ஒத்துப் பொருந்தி வாழும் பண்புகளால் மனித உறவுகள் பலப்படுத்தப்பட்டு, மண்ணும் பாதுகாக்கப்படும் என்ற உண்மையைச் சங்கப்பாடலான புறநானூறு வழி அறிய முடிகிறது.

## பண்புடையார் இலக்கணம்

**'பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்"**

என்ற பண்புடைமை இயலில் (அதி. 100) வள்ளுவர் சான்றாண்மை, ஈகை, அருளுடைமை, விருந்தோம்பல், தனக்கென வாழாமை, பிறருக்கென வாழ்தல், பொல்லாங்கு செய்யாமை ஆகிய குணங்களைஉடையவரேபண்பாளர் என்கிறார். மேலும், பண்புடையார் பெற்ற பெருஞ்செல்வம், மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர் என பண்பில்லாதவர் குணங்களையும் வரிசைப்படுத்துகிறார்.

## கற்பு

தமிழர் வாழ்வில் தனிமனித ஒழுக்கத்தைக் கட்டிக்காக்க "கற்பு" எனும் உயர்ந்த பண்பாட்டைத் தமிழன் காலம்காலமாய் பின்பற்றி வந்துள்ளமையைச் சங்க இலக்கியங்களும், தமிழ் இலக்கண நூல்களும் கூறுகின்றன. திருவள்ளுவர் திருக்குறளில் கற்பியல் என்ற தனி இயலையே வகுத்துள்ளார் பாரதியார்,

**'கற்புநிலை என்று பேசவந்தால் - அதை**
**இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்"**

என்று ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது கற்பு என்கிறார். ஒருவனுக்கு ஒருத்தி என்றும் உயர்ந்த பண்பாட்டை விளக்க வந்ததே கற்புநெறி! உண்மைக் காதல் ஒருமுறை மட்டுமே உயிரினங்களின் மனதில் தோன்றும். அக்காதல் காலங்களை வெல்லும் காவியக்காதல் அது தனது உண் மைக்காதல் ஈடேற உயிரையும் மாய்த்து க்கொள்ளும் துய்மையான காதல். இதனை காலங்காலமாய் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வரும் தமிழரின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள் வழி நாம் அறியலாம். இதனையே பாரதியார்,

**'காதல் காதல் காதல் காதல் போயின்**
**காதல் போயின் சாதல் சாதல் சாதல்"**

என்கிறார். ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையான சிலப்பதிகாரம் கற்புக்கரசி என்று தமிழ்க்கூறும் நல்லுலகால் போற்றப்படும் கண்ணகியின் வாழ்க்கையைக் கூறுகிறது. "கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்" என்பது அவ்விலக்கியம் சுட்டிக் காட்டும் உண்மை.

**'இறைவன் தொழாள் கணவன் தொழுதெழுவாள்**
**பெய்யன பெய்யும் மழை"**

எனும் திருக்குறள் பாடல்வரி கற்புடைய பெண்டிரின் சொல்வன்மையைக் கூறுகிறது.

## குடும்பம்

குடும்பம் என்ற அமைப்பு வெளிநாடுகளில் இருப்பதைப் போலில்லாமல், இந்தியாவில் அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் உணர்வுப்புர்வமானது. உண்மையான அன்புடன் கலந்த நெருக்கமான அடித்தளங்களைக் கொண்டது. அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, தங்கை என குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கு ஒரு பிரச்சினை என்றால் குடும்ப அங்கத்தினர் எல்லோரும் ஓடிச்சென்று உதவுகின்றனர். விழாக்கள், நல்லநாள் நிகழ்வுகள், இறப்பு, இழப்பு என எல்லாவற்றையும் உணர்வுப்புர்வமாகவும், உள்ளப்புர்வமாகவும் பங்குப்போட்டுக் கொள்பவன் தமிழன்.

**இல்லற மாண்பு**

சங்க கால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றிப் பேணி வயர்த்தமையை பல்வேறு பாடல்கள் மூலம் உணரமுடிகிறது. புதிதாகத் திருமணம் புரிந்த தலைவனும், தலைவியும் இல்லற வாழ்வை இனிதே துவக்குகிறார்கள். தலைவி செல்வர் வீட்டில் பிறந்து செழிப்புடன் வளர்ந்தவள். சமைத்தறியாதவள் இருப்பினும் தன் கையால் தலைவனுக்கு சமைத்துத் தர ஆவல் கொண்டாள்.

அதன் பொருட்டு தயிர்க் குழம்பைத் தயார் செய்கிறாள். தோய்ந்த கட்டித் தயிரைக் கையாற் பிசைந்து கையைக் கழுவாமல் அப்படியே தன் தூய ஆடையில் துடைத்துக் கொண்டாள். குழம்பைத் தாளிக்கும் போது ஏற்பட்ட புகை அவளது மையுண்ட கண்களை கலங்கச் செய்தது. இவ்வாறு அவள் அன்சுபுடன் செய்த குழம்பைக் கணவனுக்கு இட்டாள். அவன் அது மிகவும் இனிதாக உள்ளதாகப் பாராட்டி மகிழ்ந்து உண்கிறான் அவள் முகம் மகிழ்ச்சியால் மலர்கிறது.

**'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது Ej,**
**குவளை உன்கண் குய்ப்புகை கமழக்**
**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதன் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"**
**(குறுந் -167)**

இந்நிகழ்வின் மூலம் இல்லாள் செய்த உணவின் தன்மை எத்தகைய தாயினும் அவள் அன்புடன் செய்ததால் அதனை இனிது என்று பாராட்டி மகிழும் தலைவனின் மனப்பாங்கையும் நற்பண்பையும் உணரமுடிகிறது.

கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் எவ்வாறு அன்பு புண்டு ஒழுக வேண்டும் என்ற நற்கருத்தை வலியுறுத்துவதாக இப்பாடல் அமைகிறது.

**விருந்தோம்பல்**

நம் இல்லம் நாடி வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்று உபசரிப்பது தமிழர் பண்பாடாகும். வந்தவர்கள் அகம் மகிழ மனமுவந்து அமுது படைப்பதை கடமையாகப் போற்றுவது இல்லறத்தார் கடனாகும். தன்னை நாடி வருபவரை வரவேற்று அவர் மகிழ நாம் விருந்தளிக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

**'துயர் அறு கிளவியோடு: அயர்ந்தீகம் விருந்தே"**
**(கலித்தொகை-பாலைக்கலி:31:19)**

எனவரும் கலித்தொகைப் பாடல்வரி விருந்தோம்பல் பண்பை எடுத்துக்காட்டுகிறது.

**தன்னைப் போல் பிறரையும் நேசித்தல்**

தன்னைப் போல பிறரையும் எண்ணி பிறருக்கு ஏற்படும் துயரையும் தன் துயராகக் கருதி வாழ வேண்டும் எனக் கலித்தொகை போதிக்கிறது. அவ்வாறு பிறர் துயரைத் தன் துயராக கருதி வாழ்பவரே சான்றோர் எனவும் கூறப்பட்டுள்ளது.

**'பிறர் நோயும் தம் நோய் போல் போற்றி**
**அறன் அறிதல்**
**சான்றவர்க்கு எல்லாம் கடன்"**
**(கலித்தொகை-நெய்தற்கலி:22:2-3)**

எனவரும் பாடல் வரிகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

**மனசாட்சியுடன் வாழ்தல்**

மனச்சாட்சியை விட உயர் தர்மம் எதுவும் இல்லை என்பது கலித்தொகைப் பாடல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

**'கண்டவர் இல்லென உலகத்துள் உணராதார்**
**தங்காது தகைவின்றித் தாம்செய்யும் வினைகளுள்**
**நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும், அறிபவர்**
**நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை ஆகலின்"**
**(கலித்தொகை-நெய்தற்கலி:8:1-4)**

எனவரும் பாடலில் உணர்வில்லாதவர்கள் உலகத்துள் தாம் செய்தவற்றுள் இது

தீயது, இது கெட்டது என உணர்ந்து ஒதுக்கமாட்டார்கள். கண்டவர் யாரும் இல்லை என நினைத்து அதனை பிறருக்கு மறக்கலாம். ஆனால், நெஞ்சனைக் கூறுவதன் மூலம் மனட்சாட்சியே உயர் தர்மம் என்பது போதிக்கப்படுகின்றமை குறிப்பிடற்குரியது.

**தீங்கு செய்யாமை**

பிறருக்குத் தீங்கு செய்பவன் தானும் கெட்டு, சுற்றத்திற்கும் கேடு விளைவிப்பான். எல்லோரிடத்திலும் தீய செயல்களைச்செய்த ஒருவன்நல்ல பெயருடன் எங்கும் வாழமுடியாது. கெட்டவன் என்ற பெயரே விளங்கும். அவனது முடிவும் துன்ப முடிவாகத்தான் இருக்கும். ஆகவே பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழ வேண்டும். இதனை,

**'யார் கண்ணும் இகந்து செய்து இசை**
**கெட்டான் இறுதி"**

***(கலித்தொகை-பாலைக்கலி:9:3)***

ஏனவரும் பாடல் வரியால் அறியமுடிகிறது.

**ஈகை**

ஈகை என்பது எவ்வித எதிர்ப்பார்ப்புமின்றித் துன்புற்ற ஒருவர்க்கு அளித்தலாகும். பொருள் ஈட்டினால் மட்டுமே போதாது அதை ஈதலும் வேண்டும் அதனால்தான் புறநானூறு,

**'செல்வத்துப் பயனே ஈதல்" (புறம் : 8)**

என்கிறது.

'ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்" எனக் கலித்தொகை சுட்டுகிறது. தோண்டத் தோண்ட நீர்ஊறுவது போலக் கொடுக்கக் கொடுக்கத்தான் செல்வம் பெருகும் என்ற கருத்தும் நிலவியது. சான்றோரின் நெறியிலே வாழ்ந்தவன் ஆய் அண்டிரன் புறநானூற்றிலே அவனைப் பற்றி ஒரு செய்தி,

**'இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்**
**அறவிலை வாணிக னாயலன் பிறகும்**
**சான்றோர் சென்ற நெறியென**
**ஆங்குப் பட்டன் றவன் கைவண்மையே"**

***(134-புறநானூறு)***

அடுத்தவர்க்கு கொடுத்தல் என்பதை வாழ்வில் தலையாயக் கடமையாக மதித்து ள்ளனர் அக்கால மக்கள். கபிலர்பாரியின் ஈகையைப் பின்வருமாறு சுட்டுவர்.

**'முந்நூறு ஊறும் பாசில்பெற்றனர்**
**யாமும் பாரியும் உளமே**
**குன்றும் உண்டுநீர்பாடினீர்செலினே"**

***(110-புறநானூறு)***

தமக்கென எதையும் சேர்த்து வைக்காது ஈகை செய்து இன்புற்று மகிழ்ந்தனர்என்று மன்னர்தம் கொடைப் பண்பினைக் குறிப்பிடுகின்றது. இதைத்தான் பின்னால் வந்த ஒரு திரைப்படக் கவிஞன்

**'அள்ளிக் கொடுத்து**
**வாழ்பவார் நெஞ்சம்**
**ஆனந்தப் புந்தோப்பு"**

என்றான். எனவே ஈகை வாழ்வில் நிகழ்வில் முக்கியத்தவம் பெற்றது என்பதைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன.

**கல்வி**

கல்வியின் மகத்துவத்தை உணர்ந்தவர்களே சான்றோர்கள். கல்வி கற்க வேண்டுமெனில் ஆசிரியர்க்கு உரிய மரியாதைசெலுத்தி கற்ற வேண்டும். ஆசிரியர்களைக் காப்பதும் மாணவர்களின் இன்றைய கடமையாகக் கூறப்படுகிறது. கல்வியானது தாயின் மனதையும் மாற்றும் ஆற்றல் பெற்றது. சாதி வேறுபாட்டைக் கூட மாற்றவல்ல சக்தி வாய்ந்தது கல்வி, அதனால் தான் ஔவையாரும் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு எனக் கூறுகிறார்.

'கண்ணுடையோர் என்போர் கற்றோர்" என்று வள்ளுவரும். 'கல்லாதவன் வாழும் வீடு வெளிச்சமில்லா விடுசுசு என்று புரட்சிக் கவிஞன் பாரதிதாசனும் எழுத்தறிவின் அவசியத்தை பாடினார்.

**'எழுத்து**
**விதைகள்**
**இதயங்களில்**
**தூவப்படும்**

**போது**
**செழித்து**
**வளர்வது**
**ஒரு**
**தனி மனிதன்**
**அல்ல**
**சமுதாயம்”**

என்று கவிஞர் மு. மேத்தா கல்விச் சிந்தனைகளை கல்வெட்டாய்ப் பதித்து வைத்துள்ளார்.

**செய்நன்றி மறத்தல்**

**‘நன்றி மறப்பது நன்றன்றுநன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று”**

என்று திருவள்ளுவரும், நன்றி மறவேல் என ஔவையாரும் பிறர் தனக்குச் செய்த உதவியை ஒருநாளும் மறக்கக் கூடாது என்பதற்கு சிறுவயதிலேயே நீதிக்கதைகளும் கூறப்படுகிறது. ஒருவர் செய்த உதவியை எளிதில் மறந்து விடும் உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தமிழன் தனது இழகிய மனம் மற்றும் இரத்தத்தோடு கலந்த, பலனை எதிர்பாராது உதவிசெய்யும் உன்னதமான, உதாரத்துவமான குணத்தின் காரணமாக பிறருக்கு உதவி செய்தலைத் தன் தலையாயப் பண்பாக, பண்பாடாகக் கொண்டிருக்கிறான். கைமாறு கருதாமல் செய்யப்பட்ட உதவியைப் பெற்றவர்கள் பல நேரங்களில் செய்த நன்றியை மறந்து தீமை செய்துவிடுகிறார்கள். இரக்கக் குணத் திற்குப் பதிலாக அரக்கக் குணத்தைக் காட்டி விடுகிறார்கள். இதனால், நல்லவர்களும் கூட இக்கட்டான நேரத்தில் தக்க உதவிகள் கிடைக்காமல் வேதனைப்படுகிறார்கள்.

**சான்றாண்மை**

கோப்பெருஞ்சோழனுக்காக வடக்கிருந்து உயிர் துறந்து உண்மையான நட்புக்கு இலக்கணமானவர் பிசிராந்தையார். ஒருவன் கவலையின்றி வாழ்ந்தால் நரையின்றி, நெடுநாள் இளமையோடு வாழலாம். அதற்கு அவனுடைய மனைவி, மக்கள் நல்ல குணநலன்களில் சிறந்து, அறிவுடையவர்களாய் இருத்தல் வேண்டும். அவன் வாழும் நாட்டின்மன்னன்முறைதவறாதுமக்களைப் பாதுகாத்தல் வேண்டும். அவன் வாழும் ஊரில் நற்குணத்தால், பரிவுடையவர்களாய் மனம்போன போக்கில் வாழாது, கட்டுப் பாடோடு வாழும் சான்றோர் பலர் வாழ்தல் வேண்டும். நற்பண்பும், சான்றாண்மையும் உடையோர்கள் பலர் வாழ்வதாலேயே இவ்வுலகம் அழியாது நிலைப்பெற்று வாழ்கின்றது என்பதைத் திருவள்ளுவரும்,

**‘சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலத்தான்**
**தாங்காது மன்னோ பொறை”**

என்கிறார்.

**நிறைவுரை**

தமிழில் தோன்றிய பல்வேறு இலக்கியங்கள் பலவற்றிலும் வாழ்வுக்கு நலம் சேர்க்கும் வாழ்வியற் போதனைகள் பல இடம் பெற்றுள்ளதை காண முடிகிறது. மிகச் சிறந்த நற்பண்புகளை பின்வரும் தலைமுறையினர் நன்முறையில் பின்பற்றும் வகையில் இலக்கியங்கள் தொகுத்துரைத்திருக்கும் கருத்துகள் மிகச் சிறந்ததாக அமைந்துள்ளது. இக்கட்டுரையில் காணப்படும் வாழ்வியற் சிந்தனைகள் யாவும் மனித வாழ்வின் மேன்மைக்கு மிகமுக்கியமானவை. இத்தகு வாழ்வியற் சிந்தனைகள் தமிழர்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது என்பதல்ல, இவை உலக மாந்தர் யாவருக்கும் பொருந்தக் கூடியவையாகும். எனவே இலக்கியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகளை நாம் கடைப்பிடித்து வாழும்போது நல்முறையில் வாழ்ந்து வாழ்வில் ஏற்றம் பெறலாம் என்பதை இக்கட்டுரை மெய்ப்பிக்கும் விதத்தில் அமையப் பெற்றுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. புலியூர்க்கேசிகன், (2009),கலித்தொகை - மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.
2. புலவர் குழந்தை, (2005), திருவள்ளுவர் செய்த திருக்குறள் - உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
3. குமரன், எஸ்., (2016), 'சங்க இலக்கியம் காட்டும் பண்பாடும் வாழ்வியல் அறங்களும்'', தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயாம்புத்தூர்.
4. பாரதிதாசன் கவிதைகள், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
5. இன்னொரு தேசியகீதம், வைரமுத்து
6. வானம் கவிதைத்தொகுதி, வைரமுத்து
7. தமிழன் இதயம், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பாடல்கள்,
8. தனிப்பாடல்கள் - சமூகம் - பெண்கள் விடுதலைக்கும்மி - பாரதியார் பாடல்கள்
9. புலியூர்க்கேசிகன், (2009), குறுந்தொகை - மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை.